தினமணி

## விவசாயப் பொருள்களுக்கு புதிதாக 50 நவீனக் கிடங்குகள்: முதல்வர் அறிவிப்பு

First Published : 28 Nov 2011 01:53:04 AM IST



சென்னை, நவ. 27: வேளாண் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாத்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க உதவும் வகையில் 50 இடங்களில் நவீன வசதிகளுடன் கூடிய கிடங்குகள் கட்டப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஞாயிற்றுக்கிழமை வெளியான அரசு அறிவிப்பு:

இந்த ஆண்டு 115 லட்சம் டன் தானிய உற்பத்தி செய்ய தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிறு, குறு விவசாயிகள் பயிர்க் கடனை திரும்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், பயிர்களை நீண்ட நாள்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும், அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருள்களை விற்றுவிடுகின்றனர்.

இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

விலை வீழ்ச்சியின்போது வேளாண் பொருள்களைப் பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின்போது விற்று விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும்போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும் கருத்தில் கொண்டு, எடைபோடும் இயந்திரங்கள், எடைமேடைகள், ஈரப்பதமானி போன்ற வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான சேமிப்புக் கிடங்குகளை கூடுதலாக உருவாக்க முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

10,000 டன் கொள்ளளவு கிடங்குகள்: இதன்படி, லாரி நிறுத்தும் வசதியுடன் கூடிய 10,000 டன் கொள்ளளவில், ரூ.25 கோடி செலவில் கீழ்க்கண்ட 5 இடங்களில் கிடங்குகள் கட்டப்படும்.

ஈரோடு விற்பனைக் குழு, கருமண்டி செல்லிப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

மதுரை விற்பனைக் குழு, மதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

தஞ்சாவூர் விற்பனைக் குழு, பூதலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

கடலூர் விற்பனைக் குழு, விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

விழுப்புரம் விற்பனைக் குழு, விக்கிரவாண்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

5,000 டன் கொள்ளளவு கிடங்குகள்: லாரி நிறுத்தும் வசதியுடன் கூடிய 5000 டன் கொள்ளளவில் ரூ. 20 கோடி செலவில் கீழ்க்கண்ட 8 இடங்களில் கிடங்குகள் கட்டப்படும்.

திருவண்ணாமலை விற்பனைக் குழு, வந்தவாசி மற்றும் சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

விழுப்புரம் விற்பனைக் குழு, சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

கோயம்புத்தூர் விற்பனைக் குழு, சூலூர் மற்றும் பெத்தம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

ஈரோடு விற்பனைக் குழு, சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

தஞ்சாவூர் விற்பனைக் குழு, ஒரத்தநாடு மற்றும் வல்லம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

2,000 டன் கொள்ளளவு கிடங்குகள்: 2,000 டன் கொள்ளளவில் ரூ. 37 கோடி செலவில் கீழ்க்கண்ட 37 இடங்களில் கிடங்குகள் கட்டப்படும்.

காஞ்சிபுரம் விற்பனைக் குழு, மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

கடலூர் விற்பனைக் குழு, கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

விழுப்புரம் விற்பனைக் குழு, கள்ளக்குறிச்சி, அவலூர்பேட்டை, செஞ்சி, தியாகதுராகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

சேலம் விற்பனைக் குழு, நாமகிரிப்பேட்டை, மெய்சேரி, சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

கோயம்புத்தூர் விற்பனைக் குழு, கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, சேவூர், அவினாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

ஈரோடு விற்பனைக் குழு, அந்தியூர், அவல்பூந்துறை, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

திருச்சி விற்பனைக் குழு, ஜயங்கொண்டம், அரியலூர், துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

தஞ்சாவூர் விற்பனைக் குழு, கும்பகோணம், தஞ்சாவூர், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

புதுக்கோட்டை விற்பனைக்குழு, ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

மதுரை விற்பனைக் குழு, திருமங்கலம், உசிலம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

ராமநாதபுரம் விற்பனைக் குழு, விருதுநகர், தேவகோட்டை, முதுகளத்தூர், ஆர்.எஸ். மங்களம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

திருநெல்வேலி விற்பனைக் குழு, திருநெல்வேலி, பாவூர்சத்திரம், கடையநல்லூர், தூத்துக்குடி, வள்ளியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

கன்னியாகுமரி விற்பனைக் குழு, வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

தேனி விற்பனைக் குழு, கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

திண்டுக்கல் விற்பனைக் குழு, நத்தம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

ஆக மொத்தம் 82 கோடி ரூபாய் செலவில், நவீன வசதிகளுடன் கூடிய 50 கிடங்குகள் புதிதாக அமைக்கப்படும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருவெறும்பூர்: 2000 ஏக்கர் சம்பா மூழ்கியது**

First Published : 27 Nov 2011 01:26:30 PM IST

திருவெறும்பூர்,நவ. 26: திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் சுமார் 2000-க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் பயிரிடப்பட்டிருந்த சம்பா பயிர்கள் மூழ்கின.

திருச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்த தொடர் மழையால் பல்வேறு பகுதிகளில் உள்ள ஏரி,குளங்கள்,நிரம்பி வருகின்றன.

திருவெறும்பூர் பகுதியில் பெய்த கன மழையால் துவாக்குடி பெரிய ஏரியில் நீர் நிரம்பி வெளியேறியதால், அருகே பயிரிடப்பட்டிருந்த சுமார் 200-க்கு மேற்பட்ட ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின.

இதேபோல, பழங்கனங்குடி கிராமத்தில் செட்டிப்பட்டி ஏரி உடைந்ததால், சுமார் 200 ஏக்கர் சம்பா பயிர்களும் மூழ்கின.

மேலும், நொச்சியல்வயல் புதூர், அசூர், வேங்கூர், நடராஜபுரம், அரசங்குடி, பத்தாளப்பேட்டை, செட்டியார்பேட்டை, கூத்தைப்பார், ஆலத்தூர்,கீழகல்கண்டார்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் 1800 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த சம்பா பயிர்களையும் மழைநீர் சூழ்ந்துள்ளன.

வாளவந்தான்கோட்டை,திருநெடுங்குளம் உள்ளிட்ட ஏரிகள் அனைத்தும் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால், அப்பகுதியில் நடவு செய்த பயிர்கள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புகளில் மழை நீர்: இந்த மழையால், திருவெறும்பூர் அருகே நவல்பட்டில் அண்ணா நகர் குடியிருப்புகளில் உப்பாறு,காட்டாற்று நீர் வெள்ளிக்கிழமை புகுந்தது.

திருச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாகத் தொடரும் மழையால், ஏரி,குளங்கள் நிரம்பி வருகின்றன. வெள்ளிக்கிழமை பெய்த கன மழையால் நவல்பட்டு அருகே செல்லும் உப்பாற்று நீர் அண்ணா நகர் குடியிருப்பிலிலுள்ள சுமார் 300-க்கு மேற்பட்ட வீடுகளில் புகுந்தது.

இவற்றோடு சாக்கடைகளும் கலந்ததால் துர்நாற்றம் வீசியது. இதனால், அப்பகுதி மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர்.

தகவலறிந்த தெற்கு மாவட்ட உறுப்பினர் சித்திரவேல், ஊராட்சித் தலைவர் ராணி ராஜலிங்கம்,வட்டாட்சியர் கலியமூர்த்தி உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு விரைந்து சென்றனர். பொக்லைன் வரவழைக்கப்பட்டு, நீர் வடிய ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேபோல, நவல்பட்டு பெரியார் சமத்துவபுரத்தில் உள்ள சுமார் 50-க்கு மேற்பட்ட வீடுகளிலும் மழை நீர் புகுந்தது. தகவலறிந்த திருவெறும்பூர் எம்எல்ஏ எஸ். செந்தில்குமார் உள்ளிட்டோர் விரைந்து சென்று, பாதிக்கப்பட்டோருக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

பாலாஜி நகர் அருகே செல்லும் உய்யகொண்டான் ஆற்று நிர் நிரம்பி அருகிலுள்ள பிரகாஷ் நகர்,முத்து நகர்,பாலஜி நகர் விஸ்தரிப்பு,அஷ்டலட்சுமி நகர் உள்ளிட்ட பகுதிகளில் நீர் சூழ்ந்தது.

திருவெறும்பூர் மலைக்கோயில் அருகே மலைக்கோயில் கிரிவலப் பாதை,இந்திரா நகர் போன்ற பகுதிகளையும் நீர் சூழ்ந்தது.

9 வீடுகளின் சுவர் இடிந்தது: திருவெறும்பூர் அருகே எல்லக்குடி அகரம் பகுதியைச் சேர்ந்த கலியமூர்த்தி மனைவி பார்வதி வீட்டின் சுவர் இடிந்தது.இதேபோல, பல்வேறு இடங்களில் 9 வீடுகளின் சுவர்கள் இடிந்தன. தகலவறிந்த திருவெறும்பூர் வட்டாசியர் கலியமூர்த்தி எல்லக்குடி விஏஓ உள்ளிட்டோர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள்,அரிசி, சேலைகள், வெள்ள நிவாரண உதவித் தொகைகளை வழங்கினர்.

**நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்கக் கோரிக்கை**

First Published : 27 Nov 2011 01:11:19 PM IST

புதுக்கோட்டை, நவ. 26: புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாத் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டையில் விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் சார்பில் அண்மையில் நடைபெற்ற நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து தமிழகத்தில் உரத்தின் விலையைக் குறைக்கவும், தடையின்றி கிடைக்கவும் வழிவகை செய்ய வேண்டும். நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,500 ஆகவும், கரும்பு டன்னுக்கு ரூ.3,000 ஆகவும் உயர்த்தி அறிவிக்க வேண்டும்.

கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு தொகையை வழங்க வேண்டும். பேருந்து, பால் விலையை உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும். விவசாயிகளுக்கு 4 சதம் வட்டியில் அனைத்து வங்கிகளிலும் கடன் வழங்க வேண்டும். தடையில்லா மின்சாரம் வழங்கவும், பழுதடையும் மின்மாற்றிகளை உடனுக்குடன் பழுதுநீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு நிர்வாகி சோமையா தலைமை வகித்தார்.

இந்திய விவசாய சங்கத் தலைவர் ஜி.எஸ். தனபதி, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத் தலைவர் அப்பாவுபாலாண்டார், தமிழ்நாடு விவசாயிகள் சங்க கெப்ரவத் தலைவர் அழகர்சாமி, செயலர்கள் பொன்னுச்சாமி, மு.மாதவன், காளிமுத்து ஆகியோர் பேசினர்.

சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பி. முத்துக்குமரன் பங்கேற்று, கோரிக்கைகளை விளக்கியும், இவற்றைப் பெற அனுக வேண்டிய வழிமுறைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

**கறிக்கோழி விலை**

First Published : 27 Nov 2011 12:12:28 PM IST

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.40, முட்டைக் கோழி கிலோ ரூ.43.

**நாற்றுப் பண்ணை வளர்ப்புப் பயிற்சி**

First Published : 27 Nov 2011 12:37:59 PM IST

ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 26: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள கிருஷ்ணப்பேரி காமாக் மேல்நிலைப் பள்ளி என்.எஸ்.எஸ். மாணவர்களுக்கு குட்டதட்டியில் நாற்றுப் பண்ணை வளர்ப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

பசுமை பாரத இயக்கத்தைச் சேர்ந்த கருப்பசாமி, ராஜேஸ்வரி, செல்வராஜ், சரவணசுந்தர், ஈஷா யோகா உறுப்பினர் ஜே.மகேந்திரன், பாலு, பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் கே.ஆர்.திவாகரன், முதுகலை இயற்பியல் ஆசிரியர் ஆரோக்கியராஜ், பட்டதாரி ஆசிரியர் ஆர்.சத்தியசீலன் ஆகியோர் முகாமை நடத்தினர்.

முகாமை பசுமை பாரத இயக்கம், ஈஷாவின் பசுமைக் கரங்கள் திட்டம், காமாக் மேல்நிலைப் பள்ளியின் என்.எஸ்.எஸ். திட்டம் ஆகியவை இணைந்து நடத்தின.

**கரும்பு விவசாயிகளுக்கான சொட்டு நீர்ப் பாசனக் கருத்தரங்கு**

First Published : 27 Nov 2011 01:08:42 PM IST

அரியலூர், நவ. 26: அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் அருகே உள்ள கவுண்டர் பண்ணை பகுதியில் கரும்பு விவசாயிகளுக்கான சொட்டுநீர் பாசனக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

திருச்சி மாவட்டம், காட்டூர், அரியலூர் மாவட்டம், சாத்தமங்கலத்தில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் சார்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கு ஆலையின் பொது மேலாளர் (தொழில்நுட்பம்) கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்து, கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசியது:

கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்காக சொட்டு நீர்ப் பாசனத்தில் புதிய முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையின் மூலம் மின்சாரம் சேமிக்கப்படுவதுடன், கரும்பு உற்பத்தியும் கூடுதலாகும்.

அனைத்து வகையிலும் ஏற்றவாறு இந்தச் சொட்டுநீர்ப் பாசனக் குழாய்கள் பொருத்தப்படுவதால், எந்த நேரத்திலும் பிரச்னை ஏற்படாது. இந்த முறையை கரும்பு பயிரிடும் விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்றார் அவர்.

சொட்டுநீர்ப் பாசனத்தின் நன்மைகள், நவீன தொழில்நுட்பம் குறித்து கோத்தாரி சர்க்கரை ஆலையின் துணைப் பொது மேலாளர் ஜான் போஸ்கோ, துணைப் பொது மேலாளர் ராமச்சந்திரன், தலைவர் (கரும்பு பிரிவு) ஜோதிநாதன், மண்டல மேலாளர் துரைராஜ் ஆகியோர் பேசினர்.

வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து செயற்பொறியாளர் ஆர். மணி, வேளாண் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், சலுகைகள், மானிய உதவிகள் குறித்து வேளாண் இணை இயக்குநர் சிவகுமார், உதவி இயக்குநர் லதா ஆகியோர் விளக்கினர்.

கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை, முதுநிலை மேலாளர் வெங்கடேசபெருமாள், மண்டல மேலாளர்கள் துரைராஜ், ரவிகுமார், கீழப்பழூர் கோட்ட அலுவலர் கிருஷ்ணன், களப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

கரும்புத் துறைத் தலைவர் கே.எஸ். ராஜு கருத்தரங்க நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

**கரும்பு விவசாயிகளுக்கான சொட்டு நீர்ப் பாசனக் கருத்தரங்கு**

First Published : 27 Nov 2011 01:08:42 PM IST

அரியலூர், நவ. 26: அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் அருகே உள்ள கவுண்டர் பண்ணை பகுதியில் கரும்பு விவசாயிகளுக்கான சொட்டுநீர் பாசனக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

திருச்சி மாவட்டம், காட்டூர், அரியலூர் மாவட்டம், சாத்தமங்கலத்தில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் சார்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கு ஆலையின் பொது மேலாளர்

(தொழில்நுட்பம்) கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்து, கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசியது:

கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்காக சொட்டு நீர்ப் பாசனத்தில் புதிய முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையின் மூலம் மின்சாரம் சேமிக்கப்படுவதுடன், கரும்பு உற்பத்தியும் கூடுதலாகும்.

அனைத்து வகையிலும் ஏற்றவாறு இந்தச் சொட்டுநீர்ப் பாசனக் குழாய்கள் பொருத்தப்படுவதால், எந்த நேரத்திலும் பிரச்னை ஏற்படாது. இந்த முறையை கரும்பு பயிரிடும் விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்றார் அவர்.

சொட்டுநீர்ப் பாசனத்தின் நன்மைகள், நவீன தொழில்நுட்பம் குறித்து கோத்தாரி சர்க்கரை ஆலையின் துணைப் பொது மேலாளர் ஜான் போஸ்கோ, துணைப் பொது மேலாளர் ராமச்சந்திரன், தலைவர் (கரும்பு பிரிவு) ஜோதிநாதன், மண்டல மேலாளர் துரைராஜ் ஆகியோர் பேசினர்.

வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து செயற்பொறியாளர் ஆர். மணி, வேளாண் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், சலுகைகள், மானிய உதவிகள் குறித்து வேளாண் இணை இயக்குநர் சிவகுமார், உதவி இயக்குநர் லதா ஆகியோர் விளக்கினர்.

கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை, முதுநிலை மேலாளர் வெங்கடேசபெருமாள், மண்டல மேலாளர்கள் துரைராஜ், ரவிகுமார், கீழப்பழூர் கோட்ட அலுவலர் கிருஷ்ணன், களப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

கரும்புத் துறைத் தலைவர் கே.எஸ். ராஜு கருத்தரங்க நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

**தோகைமலையில் 81.2 மி.மீ. மழை**

First Published : 27 Nov 2011 01:05:57 PM IST

கரூர், நவ. 26: கரூர் மாவட்டம், தோகைமலையில் 81.2 மி.மீ. மழை பதிவானது.

தமிழகத்தில் வங்கக் கடலில் கன்னியாகுமரி அருகே புதிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இதையடுத்து, கரூர் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதோடு, வெள்ளிக்கிழமை மாலை, இரவு நேரங்களிலும் தொடர்ந்து மழை பெய்தது. சனிக்கிழமை காலையிலும் மழை பெய்துகொண்டிருந்ததால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

சனிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் கரூர் மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மில்லிமீட்டரில்):

அரவக்குறிச்சி-32.5, க.பரமத்தி-44.2, குளித்தலை-35, மாயனூர்-45, கரூர்-38.6, அமைப்பாளையம்-48.3, தோகைமலை-81.2, பஞ்சப்பட்டி-69.4, பாலவிடுதி-64.3, கடவூர்-64.4, கிருஷ்ணராயபுரம்-44, மயிலம்பட்டி-65. மாவட்டத்தின் சராசரி மழையளவு 52.66 மி.மீ.

**சான்றுபெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டுகோள்**

First Published : 27 Nov 2011 12:46:13 PM IST

கீழக்கரை, நவ. 26: ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் என விதைச் சான்று மற்றும் அங்கச் சான்று துறை கேட்டுக் கொண்டுள்ளது.

ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில், தற்போது வெளிமாநில விதைகள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் வேளாண்மைத் துறை அலுவலர்களின் பரிந்துரைப்படி விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். விதைகளை வாங்கும்போது சான்றுபெற்ற விதைகளை வாங்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டும் தரமான சான்று பெற்ற விதைகளைப் பெற்று பயன்படுத்த வேண்டும். சான்று பெறாத தரம் இல்லாத மற்றும் அரசு அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களில் இருந்து பெறப்படும் விதைகள், வேளாண்மைத் துறை களப் பணியாளர்கள் பரிந்துரைகள் இல்லாமல் பயன்படுத்தும் விதைகளை விவசாயிகள் பயன்படுத்தினால், அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு வேளாண்மைத் துறை பொறுப்பேற்க இயலாது.

ஆகையால், விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி, அதிக மகசூல் எடுக்க வேண்டும் என மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் செ. உமர்கத்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

**குறுதானியங்களின் முக்கியத்துவம்: விவசாயிகளுக்குப் பயிற்சி**

First Published : 27 Nov 2011 12:45:03 PM IST

காரியாபட்டி, நவ. 26: திருச்சுழி அருகே கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், குறுதானியங்களின் முக்கியத்துவம் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி பயிற்சியை துவக்கி வைத்து குறுதானியங்களான வரகு, சாமை, திணை, பணிவரகு, குதிரைவாலி, கேழ்வரகு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார்.

குறுதானிய சாகுபடி தொழில்நுட்பங்களை உதவிப் பேராசிரியர் முத்துராமு விளக்கினார். குறுதானியங்களின் சந்தை நிலவரம், விலை வாய்ப்புகள் குறித்துப் பண்ணை மேலாளர் கார்த்திக் எடுத்துரைத்தார்.

நவீன உணவுப் பழக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகள், அவற்றைத் தடுக்க குறுதானியங்களை உட்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளைத் திட்ட, தொழில்நுட்ப உதவியாளர் கவிதா செய்திருந்தார். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**இந்தியாவில் பால் உற்பத்தி 121.7 மில்லியன் டன்னாக உயர்வு**

நவம்பர் 27,2011,16:24



புதுடில்லி : நடப்பு நிதியாண்டில் உள்நாட்டில் தேவை அதிகரித்திருப்பதன் காரணமாக இந்தியாவில் பால் உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்து 121.7 மில்லியன் டன்னை எட்டி உள்ளது. ஐநா வின் உணவு மற்றும் வேளாண் கழகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவில் 116 மில்லியன் டன் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இந்திய பால் மற்றும் பால் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருவதால்

பால் உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015ல் இந்தியாவின் பால் உற்பத்தி தொழில்களின் வருமானம் ரூ.5 லட்சம் கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்திய தேயிலைகளை ஒரே பிராண்டின் விற்பனை செய்ய தேயிலை கழகம் முடிவு**

நவம்பர் 27,2011,15:23

ஜோர்கட்: ஐந்து பெரிய சந்தைகளில் தேயிலை விற்பனையை அதிகரிக்க, இந்திய தேயிலைகள் அனைத்தையும் ஒரே பிராண்டின் கீழ் விற்பனை செய்ய இந்திய தேயிலை கழகம் முடிவு செய்துள்ளது. 3 நாள் உலக தேயிலை அறிவியல் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய இந்திய தேயிலை கழக துணை தலைவர் ரோஷ்னி சென் இத்தகவலை தெரிவித்துள்ளார். இனி இந்திய தேயிலைகள் அனைத்தும் ஒரே பிராண்டில், ஒரே அடையாள சின்னத்துடன் விற்பனை செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அந்நிய சந்தைகளில் இந்திய தேயிலைகளின் விற்பனையை அதிகரிக்கவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ரஷ்யா, கசகிஸ்தான், அமெரிக்கா, ஈராக், எகிப்து உள்ளிட்ட நாடுகளே இந்திய தேயிலைகளை அதிகம் வாங்கும் நாடுகள் ஆகும்.

**விலை நிர்ணயத்தில் மத்திய அரசு விலகல் : உரம் விலை 70 சதவீதம் அதிகரிப்பு**

நவம்பர் 27,2011,09:20



உரம் விலையை நிர்ணயம் செய்து வந்த மத்திய அரசு, தன் கட்டுப்பாட்டில் இருந்து விலகிய பிறகு, ஓராண்டில் உரங்களின் விலை, மூட்டைக்கு, 70 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.
இதுகுறித்து, சேலம் மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சவுந்தர்ராஜன் கூறியதாவது: தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம், ஒரு மொத்த விற்பனையகம், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலமும் உரம் வினியோகம் செய்யப்படுகிறது. உரங்களின் விற்பனை விலை நிர்ணயம் செய்வது, கடந்தாண்டு வரை, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. 2010 ஏப்ரல் முதல், மத்திய அரசு விலை கட்டுப்பாட்டில் இருந்து விலகிக் கொண்டது. உரங்களின் உற்பத்தியாளர்களே, உரங்களின் விற்பனை விலையை நிர்ணயம் செய்ய, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
உரங்களுக்கான மானியத்தை, சத்துக்களின் அடிப்படையில் நிலை நிறுத்திவிட்டு, விற்பனை விலையை அந்தந்த உற்பத்தியாளர்களே நிர்ணயித்து வருகின்றனர். எனவே, விவசாயிகள் உரங்களை வாங்கும்போது, அந்த மூட்டையின் மீது அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச சில்லரை விற்பனை விலை என்ன உள்ளதோ, அதை மட்டும் கொடுத்து வாங்க வேண்டும். ஒரு உரம் மூட்டை, 50 கிலோ எடை கொண்டது. கடந்தாண்டு ஒரு மூட்டை டி.ஏ.பி., உரம், 510 ரூபாயாக இருந்தது இன்று, 910 ரூபாயாகவும், 280 ரூபாயாக இருந்த பொட்டாஷ் உரம், 565 ரூபாயாகவும், 450 ரூபாயாக இருந்த காம்ப்ளக்ஸ் உரம், 800 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இவ்வாறு சவுந்தர்ராஜன் கூறினார்.

**பால் கொள்முதல் விலை உயர்வால் கலப்பின மாடுகளுக்கு மவுசு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,00:03 IST

ஈரோடு: தமிழக அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தியதால், ஜெர்சி, கலப்பின மாடுகளுக்கு மவுசு அதிகரித்துள்ளது. தமிழகத்தில் ஈரோடு, அந்தியூர், மொடச்சூர், சேலம், தர்மபுரி, மதுரை, தொட்டியம், காங்கேயம் உள்பட பல்வேறு மாவட்டங்களில் 500க்கும் மேற்பட்ட மாட்டு சந்தை செயல்படுகிறது. இங்கு, ஜெர்சி, சிந்து, எருமை, கலப்பின பசு, கொங்கன் இன பசுக்கள், எருமை, ஆடு உட்பட கலப்பின மாடுகள் விற்கப்படுகிறது. பெரும்பாலும் கேரளா, பாண்டிச்சேரி, ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களை காட்டிலும், தமிழகத்தில் அதிகளவு கலப்பின பசுக்கள், ஜெர்சி, கொங்கன் பசு மற்றும் எருமைகள் கிடைக்கின்றன. இங்கிருந்து வெளிமாநில வியாபாரிகள் மாடுகளை வாங்கி சென்று இறைச்சிக்காகவும், விவசாயத்துக்காகவும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

வெளிமாநில வியாபாரிகளின் வருகையை பொறுத்து, தமிழகத்தில் மாட்டு விலை ஏறுவதும், இறங்குவதுமாக உள்ளது. தற்போது, ஏழை, எளிய மக்களுக்கு அரசு இலவச திட்டத்தின் கீழ் ஆடு, ஜெர்சி, கலப்பின கறவை மாடுகள் வழங்குகிறது. ஆனால், தமிழிக அரசும் வெளிமாநிலங்களுக்கு சென்று கலப்பின மாடுகளை வாங்கி வருகின்றன. இதனால், முன்கூட்டியே தமிழகத்தில் கறவை மாடுகள் விலை அதிகரித்துள்ளது. தற்போது, புதிதாக அரசு ஆவின் பால் கொள்முதல் விலை 2 ரூபாயும், விற்பனை விலை 6 ரூபாயும் உயர்த்தியுள்ளது. அதன்படி, கொள்முதல் விலையில், 18 ரூபாய்க்கு விற்ற பசும்பால் லிட்டர் 20 ரூபாய்க்கும், 26 ரூபாய்க்கு விற்ற எருமைப்பால் லிட்டர் 28 ரூபாய்க்கும் உயர்ந்துள்ளது. விற்பனை விலை ரூ.6.25 பைசாவாக உயர்ந்து, விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

மாட்டு சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது: தமிழகத்தில் பால் விலை உயர்வால், மாட்டு சந்தையில் ஜெர்சி, கலப்பின பசு மற்றும் கொங்கன் இன பசுக்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. வெளிமாநில வியாபாரிகளை விட, உள்ளூர் வியாபாரிகளின் வருகை தற்போது அதிகம் உள்ளது. ஆனால், விவசாயிகள் மாடுகளை விற்பனை செய்ய யாரும் முன்வருவதில்லை. வெளிமாநில வியாபாரிகள் இறைச்சிக்காக அடிமாடுகளை தான் அதிகம் வாங்கி செல்கின்றனர். மாட்டு சந்தையில் ஜெர்சி 22 ஆயிரம் முதல் 33 ஆயிரம் ரூபாய்க்கும், கலப்பின பசு மாடுகள் 35 ஆயிரம் முதல் 42 ஆயிரம் ரூபாய்க்கும், கொங்கன் இன கறவைமாடுகள் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய்க்கும், எருமை 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் ரூபாய்கும் விற்கப்படுகிறது. தமிழகத்தில் ஜெர்சி மற்றும் கலப்பின கறவை மாடுகள் தேவை அதிகரிப்பால் மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கறி விலை கிடு கிடு உயர்வு ஒரு கிலோ காரட் ரூ.60க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,00:03 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: சபரிமலை சிஸன் மற்றும் முகூர்த்த நாள் என்பதால், காய்கறி விலை கடும் உயர்ந்துள்ளது. ஈரோடு நகரில், பெரிய மார்க்கெட், நேதாஜி மார்க்கெட், சின்ன மார்க்கெட், சூரம்பட்டி மார்க்கெட், உழவர் சந்தைகளில் காய்கறி விற்கப்படுகிறது. ஊட்டி, மேட்டுப்பாளையம், ஓசூர், தர்மபுரி, பொள்ளாச்சி, பெங்களூரு, ஆந்திரா மாநிலம் மற்றும் கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து, தினமும் 30 டன் காய்கறி லாரிகள் மூலமாக விற்பனைக்கு வருகிறது. மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து, லோக்கல் காய்கறிகளும் விற்பனைக்கு

வரத்தாகிறது. தமிழகம் முழுவதுமாக கடந்த ஒன்றரை மாதங்களாக பெய்து வரும் தொடர் மழையால், காய்கறி விலை அதிகரித்தது. மழை விட்டதால், காய்கறிகளின் விலை சற்று குறைந்து காணப்பட்டது. இந்நிலையில், சபரிமலை விரதம் துவங்கியதாலும், கடந்த நான்கு நாட்களாக மழை பெய்வதாலும், முகூர்த்த நாட்கள் துவங்கியதால் காய்கறி விலை மீண்டும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் 28 முதல் 30 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ காரட், 60 ரூபாயக்குசக, 18 ரூபாய்க்கு விற்ற பீட்ரூட் 36க்கும், 14 ரூபாய்க்கு விற்ற கோஸ் 20க்கும், 14 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ் 30க்கும், 22க்கும் விற்ற நூல்கோல், 45க்கும், வெண்டைக்காய் 15 ரூபாய், 20 ரூபாய்க்கு விற்ற கத்திரிக்காய் 35 ரூபாய்க்கும், 12 ரூபாய்க்கு விற்ற முள்ளங்கி கிலோ 20 ரூபாய்யாகவும் உயர்ந்துள்ளது.

சின்ன வெங்காயம் கிலோ 22 ரூபாய், பெரிய வெங்காயம் 20 ரூபாய், தக்காளி 15 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நேதாஜி மார்க்கெட் வியாபாரி சுப்பிரமணி கூறுகையில், ""கர்நாடகா, ஆந்திராவிலும், சபரிமலைக்கு விரதம் மேற்கொள்வதால், இங்கிலீஸ் காய்கறிகள் வரத்து பாதியாக குறைந்துள்ளது. தவிர, மேட்டுபாளையம் பகுதியில் இருந்தும், கேரளா மாநிலத்துக்கு அதிகப்படியான காய்கறிகள் கொண்டு செல்லப்படுவதால், வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. மழை பெய்வதால், லோக்கல் காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகைக்கு பின்னரே, காய்கறி வரத்து அதிகரித்து, விலை குறையும். சின்ன, பெரிய வெங்காயம், தக்காளி வரத்து உள்ளதால் விலை உயர வாய்ப்பில்லை,'' என்றார்.

**ஊடுபயிராக சாகுபடியாகும் கோகோ : கூடுதல் லாபத்தால் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,00:03 IST

ஈரோடு : ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் கோகோ, விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் தரும் பயிராக அமைகிறது. ஈரோடு மாவட்டத்தில் தோட்டக்கலை உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்து, முழுமையான வளர்ச்சியை அடைய, தேசிய தோட்டக்கலை இயக்கம் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தி வருகிறது. 2011 - 12ம் ஆண்டில், ஈரோடு மாவட்டத்தில் 4.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டடத்தில் மா அடர் நடவு, நெல்லி, பப்பாளி, எலுமிச்சை, கோகோ, திசுவாழை, குமிழ்மலர்கள், உதிரி மலர்கள், மஞ்சள், குறுமிளகு போன்ற பயிர்களின் பரப்பு அதிகரித்து, இப்பயிர்களில் மகரந்த சேர்க்கையை ஊக்குவிக்க தேனீப்பெட்டி, தேனீக்கூட்டம் வழங்குதல் பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையில் பிளாஸ்டிக் மூடாக்கு சாகுபடி முறை போன்றவை மானியத்தில் வழங்கப்படுகிறது.

டி.என்.பாளையம் பங்களாபுதூர் பகுதியில் செல்வராஜ் என்பவர் 2 ஏக்கரில் சாகுபடி செய்து தொடர் பலன் அடைந்து வருகிறார். சாகுபடி மற்றும் லாபம் குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் விஸ்வநாதன் கூறியதாவது: தென்னை உட்பட பல பயிர்களுக்கு ஊடுபயிராக, கூடுதல் லாபம் பெறும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் கோகோ பயிரிடப்படுகிறது. 2 ஏக்கரில் இங்கு சாகுபடி செய்யப்பட்ட கோகோவுக்கு 15 ஆயிரத்து 750 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் காய்ந்த கோகோ 300 கிலோ வரை கிடைக்கும். தற்போது ஒரு கிலோ 165 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மகசூல் நேரத்தில், காட்பரீஸ் நிறுவனம் வாரம் தோறும் வந்து வாங்கிச் செல்கின்றனர். சாக்லெட், குளிர்பானம், ஊட்டச்சத்து பானம் தயாரிப்பு போன்றவைகளுக்கு கோகோ தேவைப்படுவதால், தேசிய அளவில் தற்போது, இதன் உற்பத்தி அதிகரிக்கிறது. ஊடுபயிராக பயிரிடும் கோகோவால், ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கூடுதல் லாபம் கிடைக்கிறது. பராமரிப்பு செலவு என்பதால் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**பயிர் அறுவடை மதிப்பீடு பணி பருத்தி தோட்டங்களில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,01:23 IST

அன்னூர்:பயிர் அறுவடையை மதிப்பீடு செய்யும் பணி அன்னூர் வட்டாரத்தில் பருத்தி தோட்டங்களில் துவங்கியது.ஆண்டுதோறும் நெல், சிறுதானியங்கள், நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி ஆகிய பயிர்கள் சராசரியாக ஒரு எக்டேரில் கிடைக்கும் விளைச்சலையும், மொத்த உற்பத்தியையும், மாநில, மாவட்ட அளவில் துல்லியமாக கணிக்க, வேளாண்துறை புள்ளியியல் துறையுடன் இணைந்து பயிர் மதிப்பீட்டாய்வுகளை செய்து வருகிறது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில்தான், விவசாய விளைபொருட்களின் வட்டார, மாவட்ட, மாநில உற்பத்தி அளவு கணிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இந்த ஆண்டு அன்னூர் வட்டாரத்தில் சோளம் மானாவாரியில் 4 கிராமங்கள், பருத்தி, கரும்புக்கு தலா 3 கிராமங்கள், எள், பாசிப்பயறுக்கு தலா 2 கிராமங்கள் என 28 திடல்கள் அமைக் கப்பட்டுள்ளன. வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) இளங்கோ இத்திடல்களை ஆய்வு செய்து வருகிறார். இதன்ஒருபகுதியாக காரே கவுண்டன்பாளையம் ஊராட்சியை சேர்ந்த அச்சம்பாளையத்தில் பழனிச்சாமி தோட்டத்தில் உள்ள பருத்தி திடலில் நேற்று முன் தினம் ஆய்வு செய்யப்பட்டது. இத்தோட்டத்தில் ஜெய் பிஜி -2 என்கிற ரக பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இங்கு 10 மீட்டருக்கு 5 மீட்டர் பரப்பில் உள்ள செடிகளில் வெடித்திருந்த பருத்தி அறுவடை செய்யப்பட்டது. இவை தூசு நீக்கப்பட்டு, எடை போட்டு பார்க்கப்பட்டது. இதில் மூன்று கிலோ

100 கிராம் அளவு மகசூல் பெறப்பட்டது.வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) சீனிராஜ் கூறுகையில்,""அன்னூர் வட்டாரத்தை பொறுத்த வரை பருத்தியில் ஒரு எக்டேருக்கு எட்டு குவின்டால் மகசூல் கிடைக்க வேண்டும். இந்த ஆண்டு பருத்தி 311 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. சராசரியான மகசூல் குறைவில்லாமல் கிடைக்க வாய்ப்புள்ளது," என்றார். ஆய்வில் புள்ளியியல் ஆய்வாளர் தனபாலன், உதவி வேளாண் அலுவலர் வேல்முருகன், பிரவீண் ஆகியோர் பங்கேற்றனர்.

**ரூ. 20க்கு மண் பரிசோதனை: விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,01:29 IST

அன்னூர்:அன்னூர் வட்டாரத்தில் மண் பரிசோதனைக்கு ஒரு மாத சிறப்பு முகாம் நடக்கிறது. விவசாயிகள் பங்கேற்க வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.
தமிழக அரசு வேளாண்துறை மூலம் சிறு, குறு விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. பயிர் வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரம் மண் வளம். மண் வளம் அறிந்து, தேவையான சத்துக்களை சரியான அளவில் வழங்கி, மண்ணின் தன்மையை அறிந்து அதை சீர் செய்யவும், மண் பரிசோதனை அவசியம். இதற்காக நவ., 15 முதல் டிச., 15 வரை அன்னூர் வட்டாரத்தில் 22 வருவாய் கிராமங்களில் தலா 100 மண் மாதிரிகள் வீதம் 2,200 மாதிரிகள் சேகரித்து, பரிசோதனை செய்து தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுடன் ஒருங்கிணைந்த கையேடும் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) சீனிராஜ் அறிக்கையில் கூறியுள்ளதாவது:ரூ. 350 செலவாகும் மண் பரிசோதனை விவசாயிகளுக்கு ரூ. 20க்கு செய்யப்படுகிறது. விவசாயிகள் தங்கள் தோட்டங்களில், இலை, சருகு, புற்களை அகற்றிவிட்டு, கடலைக்கு அரை அடி ஆழத்திலும், பருத்தி, கரும்பு, மிளகாய் பயிருக்கு முக்கால் அடி ஆழத்திலும், தென்னை, பழத்தோட்ட பயிர்களுக்கு மூன்று அடி ஆழத்திலும் "வீ" வடிவத்தில் குழிவெட்டி, குழியில் ஓரமாக மண்வெட்டியால், மேலிருந்து குழி ஆழம் வரை ஒரே சீராக, ஒரு அங்குலத்தில் மண் எடுக்கவும். பொடி செய்த மண்ணை நான்கு பாகங்களாக பிரித்து, எதிர்எதிர் பாகங்களை ஒதுக்கி மீதம் உள்ள இரண்டு பாகங்களை சேர்த்து, அரை கிலோ மண் சேகரிக்க வேண்டும். இதை தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடமோ, வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகத்திலோ ஒப்படைக்கலாம். மர நிழல், எருக்குழி அருகில், தண்ணீர் பாயும் இடங்கள், வாய்க்கால் வரப்பு ஆகிய இடங்களில் மண் மாதிரி எடுக்கக்கூடாது.
மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு, உதவி இயக்குனர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் 25,000 ஏக்கர் நெல் பயிர் மூழ்கியது : கிராமங்களில் புகுந்த மழை நீர் வடிகிறது**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,01:05 IST

கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் தாழ்வான பகு திகளில் புகுந்துள்ள தண்ணீர் வடிந்து வருகிறது. நேற்று காலை லேசான வெயிலடித்த தால் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது. மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் நீரில் மூழ்கின. தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த மாதம் 24ம் தேதி துவங்கியது. அன்று முதல் கட லூர் மாவட்டத்தில் தொடர்ந்து 15 நாட்கள் மழை பரவலாக 50 செ.மீ., மழை பெய்தது. இரண் டாம் கட்டமாக கடந்த 15ம் தேதி முதல் 17ம் தேதி ஆகிய மூன்று நாட்கள் லேசான மழை பெய்தது.

இந்நிலையில் கடந்த 23ம் தேதி வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடலூர் மாவட் டத்தில் 24 மற்றும் 25ம் தேதிகளில் மழை கொட்டித் தீர்த்தது. இந்த ஆண்டு பெய்த பருவமழையிலேயே 25ம் தேதி பெய்த மழையளவுதான் மிக அதிகம். கடலூர் , சிதம்பரம் பகுதியில் 14 செ.மீ., காட்டு மன்னார்கோவில், லால் பேட்டை பகுதியில் 16 செ.மீ., வரை மழை பதிவா னது. இதனால் அனைத்து தாழ்வான பகுதிகளிலும் மழை நீர் சூழ்ந்தது. மாவட்டத்தில் 25, ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் தண் ணீரில் மூழ்கியுள்ளன. வட லூர், குறிஞ்சிப்பாடி பகுதியில் போடப்பட்ட 1,200 ஏக்கர் மணிலா பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை லேசான வெயில் அடித்தது. 12 மணிக்கு மேல் மாவட்டத்தின் ஒரு சில பகுதி களில் மட்டும் லேசான மழை பெய்தது.

மாவட்டத்தில் மழை குறைந் ததால் அணைக்கு வரும் நீர் வரத்தும் வெகுவாக குறைந் தது. கீழணையில் இருந்து உபரி நீர் 28 ஆயிரத்து 800 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகி றது. வீராணம் ஏரிக்கு தற்போது 2,800 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது.
அதில் சென்னை குடி நீருக்கு 21 கன அடியும், வெள்ளி யங்கால் ஓடைவழியாக 1,472 கன அடியும், வி.என்.எஸ்.,சில் 1,227 கன அடி என மொத்தம் 2,720 கனஅடி உபரி நீர் வெளியேற் றப்படுகிறது. சேத்தியாத்தோப்பு அணைக்கு 35 ஆயிரத்து 471 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணை யின் பாதுகாப்பு கருதி 45 ஆயிரத்து 222 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**மணிலா சாகுபடியில் அதிக விளைச்சலுக்கு முறையான தொழில்நுட்பங்கள் அவசியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,01:23 IST

திண்டிவனம் : மணிலா சாகுபடியில் அதிக விளைச்சல் பெற முறையான தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டுமென டாக்டர் சாத்தையா கூறினார். திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் மணிலா சாகுபடியில் உயர் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. இதில் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் சாத்தையா பேசியதாவது: மணிலா பயிரில் அதிக விளைச்சல், வருமானமும் பெற சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது அவசியம். விதைப் புக்கருவி கொண்டு விதைக் கும்போது குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் விதைக்கவும், பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும் முடியும்.

மணிலா விதைப்பு கருவி மூலம் வரிசைக்கு வரிசை 30 செ.மீ., இடைவெளியும், செடிக்கு செடி 10 செ.மீ., என்ற அளவில் விதைப்பினை மேற்கொள்ள வேண்டும். இந்த கருவி மூலம் ஒரு நாளைக்கு 7.8 ஏக்கர் வரை விதைக்க முடியும். இந்த கருவி தேவைப்படும் விவசாயிகள் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

அதிக விளைச்சல்: மணிலா சாகுபடியில் அதிக விளைச்சல் பெற்றிட பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். தரமான மற்றும் முளைப்புத்திறன் உள்ள விதைகளை தயார் செய்திட வேண் டும். விதை நேர்த்தி செய்தல், பயிர் எண்ணிக்கையை பராமரிப்பு செய்தல் (சதுர மீட்டருக்கு 33 செடி), சரியான விதையளவு கடைபிடித்து வரிசை விதைப்பு செய்தல் மற்றும் சீரிய உர மேலாண்மையை பின்பற்றுதல் அவசியம்.
இலைவழி நுண்ணூட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் களை மேலாண்மை, மற்றும் நோய் மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும். பண்ணை இயந்திரங்களை உபயோகித்தல் உள்ளிட்ட 10 தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் அதிக விளைச்சல் பெறலாம். இவ்வாறு டாக்டர் சாத்தையா பேசினார்.

**மரவள்ளியில் கூடுதல் மகசூல் பெற தோட்டக்கலை அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 28,2011,00:15 IST

ராசிபுரம்: "மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள், சாகுபடி தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால், கூடுதல் மகசூல் பெறலாம்' என, வெண்ணந்தூர் தோட்டக்கலை உதவி

இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தற்போது, மரவள்ளி பயிர் சாகுபடி செய்ய நல்ல தருணம். பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலத்தை, மூன்று அல்லது நான்கு முறை உழவு செய்து, கடைசி உழவில் ஏக்கருக்கு, 10 டன் தொழு உரம் அல்லது இரண்டு டன் மண்புழு உரம், டிரைகோ டெர்மாவிரிடி இரண்டு கிலோ, அசோஸ்பைரில்லம் இரண்டு கிலோ, பாஸ்போ பாக்டீரியா இரண்டு கிலோ என்ற அளவில் இட வேண்டும். மேலும், ஒரு வாரம் கழித்து, யூரியா, 40 கிலோ, சூப்பர்பாஸ்பேட், 235 கிலோ, பொட்டாஷ், 80 கிலோ என்ற அளவில் இட்டு, 90-90 செ.மீ., அல்லது, 75-75 செ.மீ., என்ற அளவில் பார் அமைத்து, எட்டு அல்லது ஒன்பது முளைப்புடன் நோய் தாக்காத வயலில் இருந்து எடுக்கப்பட்ட கரணைகளை நடவு செய்ய வேண்டும்.

நடவின்போது, கரணைகளை கார்பன்டசிம் ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தயாரிக்கப்பட்ட கரைசலில், 15 நிமிடம் மூழ்கி இருக்குமாறு வைத்து, பின் நடவு செய்ய வேண்டும். மரவள்ளி சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து, நீர்வழி உரம் கொடுப்பதன் மூலம் மகசூல், 15 முதல், 20 சதவீதம் அதிகரிப்பதோடு களை கட்டுப்பாடு, கூலியாட்கள் குறைவு, குறைந்த நீரைக் கொண்டு அதிக பரப்பளவில் சாகுபடி போன்ற நன்மைகள் கிடைக்கிறது. மரவள்ளி பயிருக்கு அமைக்கும் சொட்டுநீர் பாசன அமைப்பைக் கொண்டு பயிர் சுழற்சி மூலம் மஞ்சள், வெங்காயம், தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை ஆகிய அனைத்து பயிர்களுக்கும் நீர் பாய்ச்சலாம். எனவே, மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள் சாகுபடியில் தொழில் நுட்பங்களை கையாண்டால், கூடுதல் மகசூல் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அரும்பு தோட்டங்களில் தண்ணீர் தேங்கியதால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,00:35 IST

கிள்ளை : சிதம்பரம் அருகே அரும்பு தோட்டங்களில் தண்ணீர் தேங்கியதால் அப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சிதம்பரம் அருகே சி.முட்லூர், அ.மண்டபம், கீழமூங்கிலடி, ரயிலடி, அம்புபூட்டியபாளையம் சுற்றுப்பகுதி கிராமங்களில் அதிகளவில் அரும்பு, குண்டுமல்லி, காக்கட்டான் உள்ளிட்ட மலர் வகைகளை விவசாயிகள் உற்பத்தி செய்து வருகின்றனர். இப்பகுதியில் உற்பத்தியாகும் மலர்களுக்கு சிதம்பரம், கடலூர், புதுச்சேரி, திண்டிவனம், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகள் அரும்பு செடிகளை பதியம் போடுவதற்கு முன்பே முன்பணம் கொடுத்து விவசாயிகளிடம் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். மலர்கள் உற்பத்தியாகும் காலத்தில் அன்றைய மார்க்கெட் நிலவரத்திற்கு கொள்முதல் செய்து வந்தனர். தற்போது பெய்து வரும் கன மழையால் அரும்பு வயல்களில்

தண்ணீர் தேங்கியுள்ளதால் வாங்கிய கடனை அடைக்க முடியுமா என்று விவசாயிகள் மிகுந்த கவலைடைந்துள்ளனர்.

**தமிழகத்தில் 3.80 லட்சம் ஹெக்டேரில் மக்காசோளம்: வேளாண் இணை இயக்குனர்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,23:59 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: ""தமிழகத்தில் 3 லட்சத்து 80 ஆயிரம் ஹெக்டேரில் மக்காசோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது," என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்தார். மொரப்பூரில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் ஐசோபாம் திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த இரு நாட்கள் பயிற்சி நடந்தது. பயிற்சியை வேளாண் இணை இயக்குனர் ராஜன் துவக்கி வைத்து பேசியதாவது: இந்தியாவில் நெல், கோதுமைக்கு அடுத்தப்படியாக மக்காச்சோளம் முக்கிய பயிராக பயிரிடப்படுகிறது. மக்காசோளம் குறைந்த தண்ணீர், குறைந்த நாட்களில் அதிக உற்பத்தியை அளிக்கும் பயிராகும். இப்பயிரை விவசாயிகள் ஆண்டு முழுவதும் ஆடி, புரட்டாசி மற்றும் தை பட்டங்களில் பயிரிட்டு அதிக மகசூலை பெறலாம். நவம்பர் - டிசம்பர் மாதம் இப்பயிருக்கு ஏற்ற பருவமாகும். தமிழகத்தில் மக்காச்சோளம் 3 லட்சத்து 80 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 12.18 லட்சம் மெட்டரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் தானியத்தில் 49 சதவீதம் கோழி தீவனத்துக்கும் 25 சதவீதம் உணவுக்கும், 12 சதவீதம் மாட்டு தீவனமாகவும், ஒரு சதவீதம் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் ஒரு சதவீதம் விதைக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நமது தேவையில் 40 சதவீதம் மட்டுமே தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பவுதால், இப்பயிரை சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் நல்ல லாத்தை பெறலாம்.

இவ்வாறு அவர் பேசினார். வேளாண் துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) மேகநாதன், விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன், வேளாண் அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) அமுதவள்ளி உட்பட பலர் பேசினர். ஏற்பாடுகளை மொரப்பூர் வட்டார வேளாண் அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் செய்திருந்தனர்.

## தொடர் மழையால் மல்லிகை உற்பத்தி ஜோர் : கி.கிரி விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,23:55 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக, மல்லிகை பூக்கள் நல்ல விளைச்சல் தந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டம் மா உற்பத்திக்கு அடுத்தபடியாக மலர் உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. தனியார் மலர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையங்கள் மூலம் கொய் மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தென் மாவட்டங்களில் மட்டும் அதிக அளவில் பயிரிடப்படும் மல்லிகை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 5,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இதில் காவேரிப்பட்டணம், திம்மாபுரம், பெல்லாரம்பள்ளி, மலையாண்டஅல்லி, ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை, திம்மாபுரம், வேலம்பட்டி மற்றும் வேப்பனப்பள்ளி, ஆகிய பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில் உள்ள மேட்டு பாங்கான நிலங்களில் அதிக அளவில் மல்லிகை பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும் உற்பத்தியை கொடுக்கும் மல்லிகை பூவின் விலை பண்டிகை மற்றும் திருமண காலங்களில் உச்சத்துக்கு செல்லும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மல்லிகை தென் மாவட்ட மல்லியை போல் பூ பருத்தும் அதிக நேரம் வாடாமல் இருக்கும் தன்மை இருப்பதால் பெங்களூரு சந்தையில் கிருஷ்ணகிரி மல்லிகைக்கு நல்ல விலையும் வரவேற்பும் உண்டு.

இதன் காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து தினசரி 10 டன்னுக்கு மேல் பெங்களூரு மலர் சந்தைக்கு விற்பனைக்கு செல்லும். பெங்களூரு பகுதி வியாபாரிகள் இந்த பகுதியில் இருந்து மல்லிகை பூக்களை வாங்கி சென்று விற்பனை செய்கின்றனர். பெங்களூரு சந்தையில் தினசரி காலை முதல் மாலை வரையில் பூவின் விலை மாறி, மாறி இருக்கும் என்பதால், அதிகாலையில் கிருஷ்ணகிரி பகுதியில் இருந்து பூக்கள் பறிக்கப்பட்டு விற்பனைக்கு செல்லும். மிதமான தட்பவெப்ப சூழ்நிலையில் மட்டும் நல்ல உற்பத்தியை தரும் மல்லிகை பூ ஆண்டுதோறும் நவம்பர் மாதம் இறுதி வாரம் முதல் பிப்ரவரி மாதம் வரையில் பனி காரணமாக உற்பத்தி பாதிக்கும். இந்நிலையில், கடந்த சில வாரங்களாக கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வழக்கமாக நவம்பர் முதல் வாரத்தில் பனிபொழிவு ஏற்படும் சீதோஷ்ன நிலை மாறியுள்ளது. இதன் காரணமாகவும், நிலத்தில் ஈரப்பதம் உள்ளதாலும் மல்லிகை மொட்டுகள் பாதிப்படையாமல் நல்ல விளைச்சலை தந்து வருகிறது. இதனால் மல்லிகை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து பெருகோப்பனப்பள்ளியை சேர்ந்த மல்லிகை பூ விவசாயி ராஜாராமன் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பனி காலம் தொடங்குவதற்கு முன், ஒரு ஏக்கரில் சாகுபடி செய்துள்ள மல்லிகை செடியில் இருந்து, 150 கிலோ வரை நாள் ஒன்றுக்கு பூக்களை பறித்து விற்பனை செய்தோம். நவம்பர் மாத இறுதி வாரத்தில் பனி பொழிவு காரணமாக மல்லிகை மொட்டுகள் கருகி உற்பத்தி பாதிப்படைவதால், ஒரு ஏக்கரில், 10 கிலோ பூ மட்டுமே கிடைக்கும். ஆனால், இந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்த காரணத்தால் பனி தாக்கம் குறைந்து காணப்படுகிறது. இதனால், சீசன் இல்லாத நேரத்திலும் மல்லிகை பூக்கள் நல்ல விளைச்சலை தந்துவருகிறது. தற்போது, ஒரு ஏக்கரில், 20 கிலோ பூக்கள் அறுவடை செய்து வருகிறோம். ஒரு கிலோ மல்லிகை, 200 ரூபாயில் இருந்து, 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பாசனநீரை ஆய்வு செய்து உரச்செலவை குறைக்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,02:04 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை:பாசனநீர் மற்றும் மண் ஆய்வு செய்து, நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றினால், சாகுபடியில் உரச்செலவை குறைத்து அதிக மகசூல் பெற்று லாபம் பெறலாம்,என அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் பாசன நீரைப் பெறுவதற்காக அதிகளவில் முதலீடு செய்கின்றனர். இதில் ஆயிரம் அடிவரை கூட ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து, தரம் குறைந்த மிகக்குறைவான நீரையே பெறும் நிலையுள்ளது. இப்படி பலதரப்பட்ட பிரச்னையில் பெறும் தண்ணீரை, உரியமுறையில் ஆய்வு செய்து அதன் துணையோடு பயிர் செய்தால், பாதிப்புகளை குறைத்து அதிக மகசூல் பெறலாம்.பாசன நீரில் சோடியம், பொட்டாசியம், கால்சியம், மெக்னீசியம் ஆகிய பயிர் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துகள் கரைந்துள்ளன. சத்துகளின் அளவு சரி விகிதத்தில் இருக்குமானால், பயிர் வளர்ச்சிக்கு உதவும். உப்பின் நிலை அதிகமாக இருப்பின், பயிர் வளர்ச்சியை பாதிப்பதுடன் மண்ணின் தன்மையை காலப்போக்கில் மாற்றிவிடும்.நாம் பயன்படுத்தும் பாசன நீரில் பொட்டாசியம் தேவையான அளவில் இருப்பின், பொட்டாஷ் உரஅளவை குறைத்து கொள்ளலாம். உதாரணமாக பாசன நீரில் 30 பி.பி.எம்., பொட்டாஷ் இருந்தால், ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு முறை 2 செ.மீ., அளவு நீர் பாய்ச்சினால் 80,000 லிட்டர் நீர் பாயும். இதில் பொட்டாஷியத்தின் அளவு 2.4 கிலோ இருக்கிறது.ஒரு ஏக்கர் வாழைபயிருக்கு 50 முறை நீர் பாய்ச்சினால் 120 கிலே பொட்டாஷ் நிலத்தில் சேர்கிறது.

நாம் உபயோகிக்கும் பொட்டாஷ் உரத்தில் 120 கிலோவை குறைத்து கொள்ளலாம். இதன் இன்றைய மதிப்பு 15000 ரூபாய். இதனால் தேவையான அளவு பொட்டாஷ் பயிருக்கு கிடைப்பதுடன் மண்ணில் வீணாவது தடுக்கப்படுகிறது.சோடியம் உப்பு அதிகமாக இருக்கும் பாசனநீரை தென்னை, பருத்தி, பீட்ரூட் போன்ற சோடியத்தை அதிகமாக உட்கொள்ளும் பயிர்களுக்கு பயன்படுத்தலாம். மெக்னீசியம் உப்பு அதிகமாக இருப்பின் தக்காளி, கறிவேப்பிலை போன்ற பயிர்கள் பயிரிடலாம். கால்சியம் அதிகம் இருப்பின் நிலக்கடலை, கத்திரி போன்ற பயிர்களை தேர்வு செய்யலாம்.மண்ணின் இயற்பியல் பண்புகளான மண்நயம், நீர் உட்புகும் தன்மை, வடிதிறன் ஆகியவற்றை பொறுத்து பாசனநீரை பயன்படுத்தலாம். பாசன நீரில் அதிக உப்புகள் இருந்தால் மணற்பாங்கான நிலங்களுக்கு பாய்ச்சுவதன் மூலம் உப்பின் கடுமையை குறைக்கலாம்.இம்மாதிரியான நிலத்தில் பயிரின் வேர்ப்பகுதியில் நீர் அதிகம் தேங்காமல் விரைவாக வெளியேறி, உப்பில் பாதிப்பில் இருந்து பயிர் காப்பாற்றப்படுகிறது. ஆனால் களிமண் போன்ற மென்மையான மண்ணில் அதிக நேரம் நீர் தங்குவதால், பயிரில் பாதிப்புகள் அதிகமாக ஏற்படும்.

உப்புநீரை ஒரே சமயத்தில் அதிகமாக பாய்ச்சாமல், குறைந்த இடைவெளியில் குறைவாக பாய்ச்சுவதால், உப்பின் பாதிப்புகளை 10 சதவீதம் குறைக்கலாம். மழைநீர் உப்புகள் இல்லாமல் தூய்மையாக இருக்கும். ஆண்டு முழுவதும் நிலத்தில் படிந்துள்ள உப்புகளை, மழைநீர் வெளியேற்றும் தன்மை கொண்டது. கூடுதல் தகவலுக்கு வேளாண் துறையின் கீழ் இயங்கும் "மண்வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு' நிறுவனத்தின் மூத்த வேளாண்மை அலுவலரை (94425-16641) அணுகி, ஆலோசனைகளை பெறலாம், என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**விவசாயத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

பீளமேடு:""பெருகி வரும் மக்கள் தொகை, அதிகரித்து வரும் அடிப்படை கட்டமைப்பு வசதியால் குறுகி வரும் நிலப்பரப்பு போன்றவை விவசாயத்தின் மீது அதிக கவனத்தை செலுத்த வேண்டிய கட்டாயம் உருவாகி வருகிறது,'' என, தமிழ்நாடு வேளாண் பல்கலை டீன் ராஜராஜன் பேசினார்.கோவை, சிட்ரா அருகில் உள்ள பார்க் குளோபல் பள்ளியில், குழந்தைகளுக்கான அறிவியல், கணித கண்காட்சி துவங்கியது. துவக்க விழாவில், பார்க் குளோபல் பள்ளியின் தலைமை ஆலோசகர் பாவனி ராமச்சந்திரன் வரவேற்றார்.பார்க் குழுமங்களின் முதன்மை நிர்வாக அலுவலர் அனுஷா மகேஷ் பேசியதாவது:திறமைக்கு வாய்ப்பளிக்கும்விதமாக, கண்காட்சிகளை நடத்தி வருகிறோம்.

திறமைக்கு வயது எவ்விதத்திலும் தொடர்பு இல்லை. இளைய தலைமுறையினர் வேகமாக கற்பதோடு, நிர்வாகத்திறனும் பெற்றவர்களாக உள்ளனர். கண்டுபிடிப்புகளை பிறருக்கு சொல்லாமல் மூடி மறைத்துக் கொள்வது தான் மோசமான குணம். பிறரோடு பகிர் வதால், அனைவருக்கும் பயன்படும் என்றார்.தமிழ்நாடு வேளா ண்மை பல்கலையின் டீன் ராஜராஜன் பேசியதாவது:இந்திய மக்கள் தொகை 124 கோடியை எட்டியுள்ளது. வாழும் கால அளவின் சராசரி வயது அதிகரித்துள்ளது. முன்பு 52 ஆக இருந்தது, தற்போது 64 வயதாக உயர்ந்துள்ளது. எனவே, உணவுத்தேவையின் அளவு கணிசமாக உயர்ந்துள்ளது.வீடுகள் அதிகரித்து வருவதால் பயிரிடும் நிலப்பரப்பு குறைந்துள்ளது. விவசாயத்தில் இருந்த கவனமும் கணிசமாக குறைந்துள்ளது. எனவே, இளைய தலைமுறையினர் விவசாயத்தின் மீது கவனம் செலுத்த வேண்டியது அவசியம். விவசாயத்தில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அரசு, மகளிர் வேளாண் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்றார்.முதல்வர் பானுமதி நன்றி கூறினார்.

**பயிற்சிக்கு விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,01:50 IST

பொள்ளாச்சி:விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் மற்றும் நீரின் சேமிப்பு பற்றி பயிற்சி முகாம் நடக்கிறது.பொள்ளாச்சி வேளாண் துறை உதவி செயற்பொறியாளர் அறிக்கை வருமாறு:விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலமாக ஐந்து நாட்களுக்கு இரண்டு பயிற்சி முகாம் நடக்கவுள்ளது. பயிற்சிக்கு 20 நபர் வீதம் முதலில் வரும் 40 விவசாயிகளின் பதிவு அடிப்படையில் பயிற்சிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் நீரின் சேமிப்பு தொடர்பான பயிற்சி, நெல் சாகுபடிக்கு தேவையான இயந்திரங்கள் தேர்வு செய்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது.ஒவ்வொரு பயிற்சியும் தலா ஐந்து நாட்கள் வீதம் ஒரு விவசாயிக்கு பயிற்சி மட்டும் அனுமதிக்கப்படும். பயிற்சியின் போது நாள் ஒன்றுக்கு 60 ரூபாய் வீதம் உதவித்தொகை வழங்கப்படும்.விபரங்களுக்கு உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை அலுவலகம், 19, காமராஜர் தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி-2, செல்போன்: 04259 231271.

**வேளாண்மைத்துறையில் தமிழகம் முதல் மாநிலமாகும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,01:45 IST

பொள்ளாச்சி:இந்தியாவிலேயே வேளாண்மைத்துறையில் தமிழகம் முதல் மாநிலமாக மாறும் என வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் பேசினார். பொள்ளாச்சியில் அட்மா திட்டம்-தென்னை இனக்கவர்ச்சிப் பொறி வழங்குதல் மற்றும் சிறுதானிய பயிர்கள் ஊக்குவிப்பு திட்ட இடுபொருள் வழங்கும்விழா நேற்று நடந்தது. வேளாண்மைதுறை அமைச்சர் தாமோதரன் திட்ட இடுபொருள்களை வழங்கினார். எம்.எல்.ஏ., முத்துகருப்பண்ணசாமி தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் (பொள்ளாச்சி வடக்கு) உமாராணி வரவேற்றார். அட்மா திட்ட தலைவர் சக்திவேல் முன்னிலை வகித்தார். கோவை வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) இளங்கோ சிறப்புரையாற்றினார்.

சிறுதானியப்பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மைதுறை சார்பில் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 200 விவசாயிகளுக்கு 3 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டது.வேளாண்மைதுறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது: இந்தியாவிலேயே தமிழகத்தை வேளாண்மைத்துறையில் முதல்மாநிலமாக மாற்ற வேளாண்மைதுறைக்கு முதலமைச்சர் முன்னுரிமை வழங்கியுள்ளார். விவசாய உற்பத்தியை அதிகரித்து இரண்டு மடங்காக மாற்ற விவசாயிகளுக்கு அதிக அளவில் புதிய திட்டங்களும், மானியமும், விவசாயத்திற்கு நவீன கருவிகளும் வழங்கப்பட உள்ளது.அரசு விவசாயிகளுக்கு எவ்வளவு திட்டங்கள் அறிவித்தாலும் திட்டங்களை விவசாயிகள் தெரிந்து ஒத்துழைப்பு அளித்து விவசாய உற்பத்தியை பெருக்கவேண்டும்.

விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆள்பற்றாக்குறையை போக்க இயந்திரமயமாக்கல் மூலம் சரிசெய்யப்படும்.தமிழகத்தில் கோவை மாவட்டத்தை விவசாய உற்பத்தியில் முன்மாதிரியாக மாற்ற விவசாயிகள் ஒத்துழைப்பு தரவேண்டும். ஆனைமலையில் நெல் கொள்முதல் மையமும், சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்படும். உழவர் மையம் தமிழகத்தில் பத்து இடங்களில் அமைக்கப்பட உள்ளது. இதில் பொள்ளாச்சியில் 1.5 கோடி ரூபாய் செலவில் உழவர் மையமும்,வடசித்தூரில் 25 லட்சம் ரூபாய் செலவில் வேளாண்மை விரிவாக்க மையமும், வடக்கிபாளையத்தில் 80 லட்சம் செலவில் வணிகவளாகமும் கட்டப்பட உள்ளது என்றார்.

**மழையால் கொப்பரை வரத்து குறைந்தது**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,01:41 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி:தேங்காய் சீசன் முடிந்து விட்டதாலும், மழை காரணமாகவும் மார்க்கெட்டிற்கு தேங்காய், கொப்பரை வரத்து குறைந்துள்ளது.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 19ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 56 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு ஆயிரத்து 200 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 84 ரூபாயும் விலை கிடைத்தது.உரித்த தேங்காய் டன்னுக்கு 16 ஆயிரம் முதல் 17 ஆயிரம் ரூபாய் விலை கிடைத்தது. சென்னை, மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு உணவு தேவைக்காக அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரத்து 500 ரூபாய் விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 9.25 - 9.50 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 8.50 - 9 ரூபாயும் விலை கிடைத்தது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 54.50 - 55.50 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு ஆயிரத்து 200 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 84 ரூபாயும் விலை கிடைத்தது.
விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரத்து 500 ரூபாய் முதல், 16 ஆயிரத்து 500 ரூபாய் விலை கிடைத்தது.

சென்னை, மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரம் ரூபாய் விலை கிடைத்தது. இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் முதல் 9.50 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது. வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு எட்டுரூபாய் முதல் 8.50 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை மார்க்கெட்டில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தேங்காய் சீசன் முடிந்து விட்டதாலும், மழை பெய்வதாலும் தேவைக்கேற்ப தேங்காய், கொப்பரை கிடைப்பதில்லை.மழை காரணமாக கொப்பரையின் தரமும் குறைந்துள்ளதால் மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது' என்றனர்.

**தேயிலை விவசாயிகளுக்கு50 சதவீத மானியம் பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,02:40 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர்:தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின சிறு தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை வாரியம் மூலம் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. கூடலூர் அத்திப்பாளியில் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் தேயிலை வாரிய துணை இயக்குனர் அனுப்தாஸ் பேசுகையில்,"" தாழ்த்தப்பட்ட, பழங்குடி சிறு தேயிலை விவசாயிகள் (தனி நபர்) பயன்படும் வகையில் தேயிலை வாரியம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் தேயிலை விவசாயத்துக்கு தேவைக்கான வாகனம், இலை ஷெட் அமைப்பு, தராசு உள்ளிட்டவைகளுக்கு 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.இதற்கான விண்ணப்பங்கள் கூடலூர் செம்பாலா உபாசி அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்," என்றார். கூட்டத்தில், தேயிலை வாரிய உதவி இயக்குனர் பியோரி, உபாசி ராமமூர்த்தி, ஆலோசனை அலுவலர் சங்கரநாராயணன், திட்ட அலுவலர் அன்பரசு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதில், சலிவயல் சிறு விவசாயிகள் சங்க துணை தலைவர் ஷாஜி வரவேற்றார். காந்திநகர் சிறு விவசாய சங்க செயலாளர் ரிச்சட் நன்றி கூறினார்.

**சொட்டு நீர் பாசன கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,00:54 IST

கருத்தை பதிவு செய்ய

அரியலூர்: கீழப்பழுவூர் அருகே கோத்தாரி சர்க்கரை ஆலை சார்பில், சொட்டு நீர் பாசன கருத்தரங்கு நடந்தது.

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அருகே, கவுண்டர் பண்ணையில் உள்ள, நல்லியப்ப கவுண்டர் தோட்டத்தில், கோத்தாரி சர்க்கரை ஆலை சார்பில் நடந்த சொட்டு நீர் பாசனம் பற்றிய கருத்தரங்கில், ஆலையின் பொது மேலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். சொட்டு நீர் பாசனத்தால் ஏற்படும் நன்மை மற்றும் நவீன தொழில்நுட்பம் பற்றி, பொது மேலாளர் ஜான் போஸ்கோ விளக்கிக் கூறினார். கரும்பு விவசாயத்துக்கு அரசு செய்யும் உதவி மற்றும்

வழங்கப்படும் மானியம் பற்றி, வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார், திருமானூர் உதவி இயக்குநர் லதா ஆகியோர் பேசினர். கருத்தரங்கில் கோத்தாரி சர்க்கரை ஆலையின் துணை பொது மேலாளர் ராமச்சந்திரன், ஜோதிநாதன், மண்டல மேலாளர் துரைராஜ், வேளாண்மை பொறியியல் துறையை சேர்ந்த மணி, முதுநிலை மேலாளர் வெங்கடேச பெருமாள், மண்டல மேலாளர் ரவிக்குமார், கீழப்பழுவூர் கோட்ட அலுவலர் கிருஷ்ணன் மற்றும் விவசாயிகள் களப்பணியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கரும்புத்துறை தலைவர் ராஜூ நன்றி கூறினார்.

**ஏலத்தோட்டங்களில் சூறைக்காற்று**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,22:50 IST

கருத்தை பதிவு செய்ய

கம்பம் : இடுக்கி மாவட்ட ஏலத்தோட்டங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் தங்கி பணிபுரிய, குடியிருப்புகள் உள்ளன. கடந்த சில நாட்களாக பெய்து வரும் புயல் மழையால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் மழையுடன் சூறைக்காற்றும் வீசுகிறது. இதனால் ஏலத்தோட்டங்களில் உள்ள மரங்கள் முறிந்து விழுகின்றன. இதனால் ஏலச்செடிகள் சேதமடைகின்றன. தோட்டங்களில் உள்ள தொழிலாளர் குடியிருப்புகளில் மேற்கூரைகள் காற்றில் பறக்கின்றன. இதனால் குடியிருக்க முடியாத நிலை எழுந்துள்ளது. வண்டன்மேடு அருகில், ஆனவிலாசம் கிராமத்தில் உள்ள மாதவன்கானல் பகுதியில் ஏலத்தோட்ட தொழிலாளர் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. இதனால் தொழிலாளர்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். சூறைக்காற்றும், பலத்த மழையும் பெய்து வருவதால், ஏலத்தோட்டங்களில் வேலைகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2011,01:31 IST

மதுரை : ""சம்பா பருவத்தில் பயிரிடப்படும் நெல் பயிருக்கான பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் விவசாயிகள் இணைந்து பயன் பெறலாம்,'' என மதுரை மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் வடிவேல்குமார் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: பிரிமியம் தொகையாக கடன் பெறாத சிறு, குறு விசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.75. கடன் பெறும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.83. இழப்பீட்டு தொகை

ஏக்கருக்கு ரூ.8,324 வழங்கப்படும். காப்பீடு செய்வதற்கு டிச.,15 கடைசி நாள். பிரிமியத் தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். விவரங்களுக்கு மேற்கு வட்டார வேளாண் விரிவாக்க மையம், மொபைல் எண் 994 214 0643 தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

தினகரன்

**மல்லிகை பூ ஒரு கிலோ ரூ.2,000**

பதிவு செய்த நாள் : 11/28/2011 0:31:25



நெல்லை : நெல்லை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக, ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.2,000 ஆக உயர்ந்துள்ளது. நெல்லை, பாளை மார்க்கெட்டுகளுக்கு ஆலங்குளம், சிவகாமிபுரம், முனைஞ்சிப்பட்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பூக்கள் கொண்டு வரப்படுகின்றன.மழைக் காலத்தையொட்டி மார்க்கெட்டுகளுக்கு பூ வரத்து குறைந்துள்ளதால், மல்லி உள்ளிட்ட பூக்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது

நேற்று வளர்பிறையில் சுபமுகூர்த்தம் என்பதால், நேற்று முன்தினம் இரவு துவங்கி நேற்று காலை வரை பாளை மார்க்கெட்டில் ஒரு கிலோ மல்லிகை பூ ஸி2000க்கு விற்பனையானது. வரலாறு காணாத இவ்விலை உயர்வால், திருமணம் உள்ளிட்ட சுபகாரியங்களுக்கு மல்லிகை பூக்களை வாங்க முடியாமல் திணறினர். பிச்சிப்பூ விலையும் கிலோ விலை ரூ.1750 என இருந்ததால், நடுத்தர குடும்பத்தினரால் பூக்களை வாங்க முடியவில்லை.

கேந்தி பூக்கள் கிலோ ரூ.80க்கும், வாடாமல்லி ரூ.50க்கும் விற்கப்பட்டன. ஆனால் வழக்கத்திற்கு மாறாக ரெட்ரோஸ் நெல்லை, பாளை மார்க்கெட்டுகளில் மலிவு விலையில் கிடைத்தது.

ரெட்ரோஸ் ஒருகிலோ ஸி30க்கும், ஒரு பாக்கெட் ரூ.20க்கும் விற்பனை செய்யப்பட்டன. மழைகாலம் துவங்கியதில் இருந்தே பாளை பூ மார்க்கெட்டுக்கு கனகாம்பரம் சுத்தமாக வரத்து இல்லை என வியாபாரிகள் வருத்தப்பட்டனர்.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

**தொழில் வளர்ச்சிக்காக கண்மூடித்தனமாக விவசாய நிலங்களை கையகப்படுத்தினால் உணவு பற்றாக்குறை ஏற்படும் சுப்ரீம் கோர்ட்டு எச்சரிக்கை**

*புதுடெல்லி, நவ.28–*

தொழில் வளர்ச்சி என்ற பெயரில், கண்மூடித்தனமாக விவசாய நிலங்களை கையகப்படுத்தினால் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்று சுப்ரீம் கோர்ட்டு எச்சரித்துள்ளது.

நிலம் ரத்து

அரியானா மாநில அரசு, கடந்த 2006–ம் ஆண்டில் விவசாய நிலங்களை கையகப்படுத்தியதை எதிர்த்து ரகுவீர்சிங் ஷெராவத் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதை விசாரித்த நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, முகோபாத்யாயா ஆகியோர் அடங்கிய பெஞ்ச், நிலம் கையகப்படுத்திய உத்தரவை ரத்து செய்தது. அரியானா மாநில அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், வழக்கு செலவாக ரூ.2½ லட்சம் செலுத்த உத்தரவிட்டது.

நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறி இருப்பதாவது:–

அரசாங்கம் ஏன் இவ்வளவு நிலத்தை, அதுவும் சட்டத்துக்கு அப்பாற்பட்டு கையகப்படுத்தியது என்பதை புரிந்து கொள்ளவே முடியவில்லை.

உணவு பற்றாக்குறை

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையம் கூறியதைப் போல, தொழில் வளர்ச்சி என்ற பெயரில் கண்மூடித்தனமாக விவசாய நிலங்களை கையகப்படுத்தினால், அது எதிர்காலத்தில் உணவு பற்றாக்குறைக்கு வழிவகுத்துவிடும். நம் நாட்டின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு, எது வேண்டுமானாலும் காத்திருக்கலாம், ஆனால் விவசாயம் காத்திருக்கக் கூடாது என்று கூறினார். அதை மறக்கக்கூடாது.

தற்கொலை

அரசாங்கங்கள், வளர்ச்சி பணிகளுக்கு அரசு நிலத்தையே பயன்படுத்த வேண்டும். தனியார் நிலத்தை கையகப்படுத்த வேண்டி இருந்தால், அதை சட்டத்துக்கு உட்பட்ட வகையிலேயே செய்ய வேண்டும். இப்படி விவசாயிகளின் நிலங்களை கையகப்படுத்துவதுதான், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களில் ஒன்று ஆகும்.

அவர்களின் நிலங் களை கையகப்படுத்துவதால், தற்போதைய சந்ததி மட்டுமின்றி வருங்கால சந்ததிகளும் அழிந்து விடும்.

எனவே, தொழில்மயமாக்கல் என்ற பெயரில், விவசாயிகளின் நிலங்களை பறிப்பது, முற்றிலும் நியாயமற்றது, தன்னிச்சையானது.இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

*தொடர் மழை எதிரொலி காஞ்சீபுரம் மாவட்டத்தில் 160 ஏரிகள் நிரம்பின*

*காஞ்சீபுரம், நவ.28–*
*காஞ்சீபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த பலத்த மழையின் காரணமாக 160 ஏரிகள் நிரம்பியுள்ளன.*
*160 ஏரிகள் நிரம்பின*
*காஞ்சீபுரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டம் முழுவதும் உள்ள சாலைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. குடியிருப்பு பகுதிகளை சுற்றி வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.*
*காஞ்சீபுரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 912 ஏரிகளில் உள்ளன. இதில் 160 ஏரிகள் நிரம்பியுள்ளன. 17 ஏரிகளில் பொன்விளைந்தகளத்தூர் ஏரி, மானாம்பதி ஏரி, மதுராந்தகம் ஏரி ஆகிய ஏரிகள் முழு அளவில் நிரம்பியுள்ளன. மற்ற ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.*
*மேலும் ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், தென்னேரி, கொளவாய், தையூர், பிள்ளைப்பாக்கம், தூசி–மாமண்டூர், மணிமங்கலம், சிறுதாவூர், மண்ணிவாக்கம், செவிலிமேடு உள்பட 100–க்கும் மேற்பட்ட ஏரிகள் வேகமாக நிரம்புகின்றன. பெரும்பாலான ஏரிகளின் கரைகள் பலவீனம் அடைந்துள்ளது. இதனால் ஏரிகளின் கரைகள் பலப்படுத்தும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.*
*காஞ்சீபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம் ஆகிய பகுதிகளை ஒன்றினைத்து 3 கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் காந்திமதிநாதன், செல்வராஜ், முருகன் மற்றும் அதிகாரிகள் தலைமையில் 24 மணி நேரமும் பொதுப்பணித்துறை ஊழியர்கள் ஏரிகளை கண்காணிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*
*மழை அளவு*
*நேற்று காலை வரை மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–*
*கேளம்பாக்கம்–83, தாம்பரம்–56.4, காஞ்சீபுரம்–54, ஸ்ரீபெரும்புதூர்–51, செங்கல்பட்டு–49.4, மாமல்லபுரம்–38.4, உத்திரமேரூர்–13, செய்யூர்–10, மதுராந்தகம்–7.3*
*எம்.எல்.ஏ. ஆய்வு*
*மழையின் காரணமாக காஞ்சீபுரம் நகரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வி.சோமசுந்தரம் எம்.எல்.ஏ., நகராட்சி தலைவர் மைதிலி திருநாவுக்கரசு, துணைத்தலைவர் ஆர்.டி.சேகர், நகராட்சி ஆணையர் மோகன், என்ஜினீயர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் சென்று பார்வையிட்டு, நிவாரண பணிகளை மேற்கொண்டனர்.*
*காஞ்சீபுரம் கலெக்டர் வீடு அருகில் உள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் புகுந்துள்ளது. இதனால் அரசு ஊழியர்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். மாமல்லபுரம், கோவளம், புதுப்பட்டினம், கல்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் கடல் கொந்தளிப்பான சூழ்நிலையில் காணப்படுகிறது. இதனால் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.*
*இதுகுறித்து மாவட்ட கலெக்டர் எஸ்.சிவசண்முகராஜா கூறுகையில், ‘மழையால் ஏற்படும் சேதங்களை தடுக்கும் வகையில் அரசு அதிகாரிகள், போலீசார், தீயணைப்பு துறையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். மழையால் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகம் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது’ என்றார்.*
*ஆற்றில் வெள்ளப்பெருக்கு*
*செய்யூர் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதாலும், மதுராந்தகம் ஏரியில் இருந்து வரும் உபரி நீர் வெளியேற்றப்படுவதாலும் நீலமங்கலம் கிராமத்தில் உள்ள கிளை ஆறு வழியாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் இந்த பகுதியில் உள்ள தரைப்பாலம்*

வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பாலத்தை கடந்து செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே இங்கு உயரமான பாலம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறார்கள்.

பொதுமக்கள் தவிப்பு

குன்றத்தூர் ஒன்றியம் அமரம்பேடு ஊராட்சி பகுதியில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம் காட்டரம்பாக்கம் ஊராட்சிக்கு செல்லும் நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் செல்லும் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்கள் செல்வதற்காக பக்கவாட்டில் மாற்றுப்பாதை அமைக்கப்பட்டது.

தற்போது பெய்து வரும் மலையின் காரணமாக கால்வாயில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் இந்த வழியை பயன் படுத்தி செல்லும் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளார்கள். எனவே பாலம்கட்டும் பணியை துரிதப்படுத்த வேண்டும் எனவும், குறித்த காலத்தில் பணியை முடித்திருந்தால் எங்களுக்கு இப்போது பாதிப்பு ஏற்பட்டிருக்காது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.